பக்கங்கள்:11
விலை : 30/-
# காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 19 வியாழக்கிழமை 02.06.2022 கதிர் 209

இனிது ரகசியம் அல்ல!

துமிந்த சில்வா கைதாகி விட்டார். எது, எப்படி என்றாலும் இந்தக் கைது இடைக்கால உத்தரவு ஒன்றின் அடிப்படையிலானது மட்டும்தான். அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கி ஜனாதிபதி விடுத்த உத்தரவை உயர்நீதி மன்றம் இடைநிறுத்தி

☞2

# விலைகள் உடனடியாக கிடு கிடுவென உயரும்!

## வற் வரி, சுங்க வரி அதிகரிப்பால்

கொழும்பு, ஜுன் 02

சுங்கவரி, இறக்குமதி வரி மற்றும் பெறுமதி சேர்(வற்) வரி போன்றவற்றைக் கணிசமான அளவு அதிகரிப்பதற்கு நிதி அமைச்சு முடிவு செய்திருப்பதை அடுத்து, உணவு பொருள்களின் விலைகள் முன்னைய நிலைமையிலும் விட வேகமாக - கிடுகிடுவென - உயரும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது எனக் கூறப்படுகின்றது.

☞11

## நூலக எரிப்பு நினைவேந்தல் மக்கள் முன்னணி ஏற்பாட்டில்



(கலையமுதன்)

யாழ்ப்பாணம், ஜுன் 02

யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் தீயூட்டி எரிக்கப்பட்டமையின் 41 ஆண்டு

☞11

## 369 வகையான பொருள்களின் இறக்குமதிக்கான தடை நீக்கம்

இலங்கைக்குள் இறக்குமதி செய்ய மட்டுப்படுத்தப்பட்டிருந்த 369 வகையான அத்தியாவசியமற்ற பொருள்களை இறக்குமதி செய்ய

☞11

# துமிந்த கைது!

## ஆஸ்பத்திரியில் வைத்து



கொழும்பு, ஜுன் 02

தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவரான துமிந்த சில்வாவை, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் வைத்து குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்று மாலை கைது செய்துள்ளனர்.

☞2

## வெள்ள நிவாரணப் பணியாளர் வெள்ளத்துக்குப் பலியானார்!



நாட்டின் பல பகுதிகளில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்நபர் இரத்தினபுரி - குருவிட்ட பகுதியில் ஏற்பட்ட வெள்ளத்தால் இழுத்துச் செல்லப்பட்டு, இவர் உயிரிழந்தார் என் அனர்த்த முகாமைத்துவ மையம் தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர் இரத்தினபுரி - கிரியெல்ல பிரதேசத்தில் நிவாரணப் பணியில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

☞11

## மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவுக்கு அழைக்கின்றார் சுப்ரமணியம் சுவாமி



இலங்கையின் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை இந்தியாவிற்குத் தாம் அழைக்கவுள்ளார் என இந்தியாவின் முன்னாள் அமைச்சர் சுப்ரமணி யம் சுவாமி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில் மேலும், என து நண்பரும் இலங்கைத் தலைவருமான

☞11

## நகைக் கடையில் காப்புகளை சுருட்டிய பெண்கள் சிக்கினர்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜுன். 02

யாழில் உள்ள பிரபல நகை கடையில் ஏழு காப்புகளை ஆட்டையைப் போட்ட

☞11

## காலிமுகத்திடல் தாக்குதலில் ஜோன்ஸ்டனும் சந்தேக நபர்!

### கைதானோர் தொடர்ந்து விளக்கமறியலில்

கடந்த 9 ஆம் திகதி காலிமுகத்திடல் போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்திய

☞2

## நிந்தவூர் களியோடை ஆற்றில் முதலைக்குக் குடும்பஸ்தர் பலி



(பாறுக் ஷிஹான்)

புல் வெட்டுவதற்காக சென்ற குடும்பஸ்தரை முதலை தாக்கியதில் அவர் உயிரிழந்தார். முதலை இழுத்துச் சென்ற அவரது உடல் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் மீட்கப்பட்டது.

☞11

## சிகரெட், மது விலை உயர்வு

சிகரெட்டின் விலை நேற்று முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை உள்நாட்டு மற்றும்வெளிநாட்டுமதுபானங்களின் விலையை அதிகரிக்க மதுபான நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன என அறிவிக்கப்படுகின்றது.

பெறுமதி சேர் (வற்) வரி அதிகரிப்பு காரணமாக இவ்வாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## 20 நாள்களில் இந்திய உரம் வரும் என மோடி கோட்டாவுக்கு உறுதி அளித்தார்

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் சிறுபோகத்திற்கான உரங்களை வழங்குவதற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி இணங்கம் தெரிவித்துள்ளார் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீர்ப்பாசனத் துறை எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தீர்வுகள் தொடர்பில் நேற்றுப் பிற்பகல் கோட்டை ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இந்த உரமானது இந்திய கடனுதவியுடன் வழங்கப்படுவதுடன், இலங்கைக்கு அடுத்த 20 நாள்களுக்குள் இதனை விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நெற்செய்கைக்காக 65 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியாவை யால போக பருவத்தில் வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணங்கியுள்ளது என முன்னரும் செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய நூறு கோடி டொலர் கடனுதவியின் கீழ் இந்த உரம்

☞11

## வன்முறைச் சம்பவங்கள் குறித்து விசாரணை செய்ய ஆணைக்குழு



கடந்த மார்ச் 31 ஆம் திகதி முதல் மே 15 ஆம் திகதி வரை நாட்டின் பல பகுதிகளில்

☞11

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வைத்தமையால் வந்த நிலைமை.

அந்தப் பொது மன்னிப்புக்கு எதிரான மூல வழக்கு செப்டம்பர் முதலாம் திகதி விசாரணைக்கு திகதியிடப்பட்டுள்ளது. விக்கினம் – தடை – ஏதுமின்றி அதையொட்டிய திகதிகளில் வழக்கு ஒத்திவைக்கப்படாமல் விசாரிக்கப்படுமாயின் அதன் பின் அடுத்த சில வாரங்களில் இறுதித் தீர்ப்பு வந்துவிடும்.

இலங்கையின் சட்டத்துறை வரலாற்றில் நிச்சயமாக இவ்விவகாரம் மிக முக்கிய விடயம். அதிக கவனிப்புக்குரிய வழக்கு. அதனால் அர்த்தமுள்ள ஒரு தீர்ப்பு – நீண்ட வியாக்கியானப் பதிவுகளுடன் – வெளிவரும்.

அப்போது துமிந்த சில்வாவின் வாழ்வு உள்ளேயா அல்லது வெளியேயா என்பதும் தீர்மானமாகும்.

துமிந்தவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கியமைக்கு எதிரான வழக்குக்கு முன்னர், மிருசுவில் கொலை வழக்கில் மரண தண்டனைக் குற்றவாளி சுனில் ரத்னாயக்கவுக்கும், நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் குற்றவாளியான ஞானசார தேரருக்கும் பொதுமன்னிப்பு வழங்கப்பட்டமையை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் இருந்தும், அவை எடுக்கப்படாமல், துமிந்த வழக்கு இவ்வளவு வேகமாக எடுக்கப்பட்டமை எங்ஙனம் என்ற விவகாரம் தொடர்பில் சமூக ஊடகங்களில் – குறிப்பாக சிங்கள சமூக ஊடகங்களில் – பெரும் சர்ச்சையே போகின்றது.

குறிப்பாக சுனில் ரத்னாயக்கவுக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டமைக்கு எதிரான வழக்கு தாக்கல் செய்யப்பட்டு இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன.

மேற்படி இரண்டு வழக்குகளும் பின் தள்ளிப் போனமைக்கு நியாயமான ஒரு சில காரணங்கள் உண்டு.

உதாரணத்திற்கு சுனில் ரத்னாயக்கவுக்கும் எதிரான ட்ரயல் அட் பார் வழக்கை மூன்று நீதிபதிகள் விசாரித்து மரண தண்டனைத் தீர்ப்பை வழங்கினர். அதற்கு எதிரான மேன்முறையீட்டை உயர் நீதிமன்றத்தில் ஐந்து நீதியரசர்கள் விசாரித்து மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தனர்.

இந்தத் தீர்ப்புகளை வழங்கிய நீதியரசர்கள் பலரும் இன்னும் உயர்நீதிமன்றத்தில் நீதியாளர்களாக இருக்கின்றனர்.

உயர்நீதிமன்றத்தின் மூன்று நீதியரசர்கள் ஆயத்து முன்னால் இப்போது இந்த வழக்குகள் வரும்போது அந்த ஆயத்தில், முன்னர் இந்த விவகார வழக்குகளுடன் தொடர்புபட்ட ஒன்று அல்லது இரண்டு நீதியரசர்கள் அதில் இருந்து விடுகின்றனர். அப்படியான ஆயத்தின் முன்னர் இந்த வழக்குகள் எடுக்கப்பட்டால் அவை பரிசீலிக்கப்படாமலேயே ஒத்திவைக்கப்படுகின்றன. இதுதான் சுனில் ரத்னாயக்க மற்றும் ஞானசாரர் தொடர்பிலான உயர் நீதிமன்ற வழக்குகள் தள்ளிப்போக மிக முக்கிய காரணம். தவிரவும், கொவிட் தொற்று நெருக்கடியும் மற்றொரு காரணம்.

ஆயினும், சுனில் ரத்னாயக்கவுக்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்புக்கு எதிரான வழக்கு இரண்டு வாரங்களில் – வரும் 15ஆம் திகதி உயர் நீதிமன்றுக்கு வருகின்றது. Leave to Proceed கொடுப்பதா (தொடர்ந்து மனுவை விசாரணைக்கு ஏற்பதா) என்ற தீர்மானத்தை எட்டுவதற்கான வாதம் அன்றைய தினம் தொடங்குவதாக ஏற்பாடு. வாதம் தொடங்கினால் நேற்று முன்தினம் துமிந்தவுக்கு எதிரான வழக்கில் கொடுக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு சுனில் ரத்நாயக்கவுக்கும் விடுக்கப்பட வாய்ப்புகள் தாராளமாக உண்டு. அவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளன.

சுனில் ரத்னாயக்கவுக்கு எதிரான வழக்கில் ஆழமான சட்டவாதம் ஒன்று இருக்கின்றது

'நான் ஜனாதிபதியானால் சுனில் ரத்னாயக்க போன்றோருக்கு பொதுமன்னிப்புடன் விடுதலை வழங்குவேன்' என்று தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் – எழுத்தில் – வாக்குறுதி கொடுத்திருந்தார் கோட்டாபய ராஜபக்ஷ. தேர்தல் வெற்றிக்கான அரசியல் வாக்குறுதியை நிறைவேற்றவே சுனில் ரத்னாயக்கவை ஜனாதிபதி கோட்டாபய மன்னித்து விடுவித்தார் என்ற வாதம் சுனில் ரத்னாயக்கவுக்கு எதிராக முழு விடயத்தையும் திருப்பி விட சாத்தியங்கள் அதிகம் உண்டு.

ஞானசாரருக்கு மன்னிப்பு அளிக்கப்பட்ட வழக்கும் மிக முக்கியமானது.

நீதிவான் நீதிமன்ற வளாகத்துக்குள் புகுந்து, நீதிமன்றத்தையும் நீதித்துறையையும் அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் ஞானசாரருக்கு 6 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்ட விவகாரம் அது. மேற்படி நீதிவான் மேனிலை நீதிமன்றத்துக்கு தாமே முறைப்பாடு செய்து, அவரையும் கூப்பிட்டு விசாரித்த பின்னர், அந்தத் தண்டனைத் தீர்ப்பை மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கி இருக்கிறது.

அத்தகைய குற்றச்சாட்டில் குற்றவாளியாகக் காணப்பட்ட அவருக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டமைக்கான நியாயப்படுத்தல்கள் பெரும்பாலும் குறைவு என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் அவருக்கு எதிரான வழக்கில் அவருக்கும் துமிந்தவுக்கு நேர்ந்த விபரீதம் ஏற்பட வாய்ப்புகள் தாராளம் என்கின்றன சட்ட வட்டாரங்கள்.

முஸ்லிம்களை அதிகம் திட்டித் தீர்த்தபடி திரிந்த ஞானசார தேரர், முஸ்லிம்களின் நாடான சவுதி அரேபியா சென்றுள்ளார் என்று கூறப்படுகின்றது. இப்போது துமிந்த சில்வாவுக்குத் திடீரென நேர்ந்த கதியை அறிந்து அவரும் சவுதியில் நிரந்தரமாகத் தஞ்சம் எடுத்து விடுவாரோ, என்னவோ...! என்ன, காவி உடையைக் களைந்து வெள்ளை கறுப்பு உடை அணிய வேண்டி வரும். அவ்வளவுதான்!

– மின்னல் –

## துமிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்கில் மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பின்னர் ஜனாதிபதி வழங்கிய பொது மன்னிப்பை இடைநிறுத்தி உயர் நீதிமன்றம் நேற்று இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதன்படி உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அவரைக் கைது செய்து சிறைச்சாலைக் காவலில் வைக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினரையும் உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் பணித்திருந்தது.

இந்நிலையில், ஸ்ரீ ஜயவர்த்தனபுர வைத்தியசாலையின் 18 ஆம் இலக்க விடுதியில் துமிந்த சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று நேற்று மதியம் தகவல்கள் வெளியாகியிருந்தன.

அதனையடுத்து நேற்று வைத்தியசாலைக்குச் சென்ற குற்றப்புலனாய்வுப் பிரிவினர், அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் நிலையிலேயே கைதுசெய்தனர்.

## காலிமுகத்திடல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சம்பவம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ மற்றும் மஹிந்த கஹந்தகம உட்பட 4 பேர் குறித்த நபர்கள் சந்தேக நபர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இந்த விடயம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சனத் நிாந்த, மிலான் ஜயதிலக்க மற்றும் 11 சந்தேகநபர்களும் ஜூன் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 9 ஆம் திகதி ஆர்ப்பாட்டக் காரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

சந்தேகநபர்கள் நேற்றுக் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

இதன்போது குற்றப் புலனாய்வுப் பிரிவினர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரின் சட்டத்தரணிகள் ஆகியோர் முன்வைத்த சமர்ப்பணங்களைப் பரிசீலித்த நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# பம்பலப்பிட்டியில் 20 வாகனங்களை ஒரே கார் மோதிச் சேதப்படுத்தியது!



கொழும்பு, பம்பலப்பிட்டி வஜிர வீதியில் இடம் பெற்ற விபத்தில் ஒரு கார் சுமார் 20 வாகனங்களை மோதிச் சேதப்படுத்தியது.

விசாகா வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள வீதியில் நேற்று முன்தினம் மாலை இந்த விபத்து இடம்பெற்றது.

காலி வீதியில் இருந்து வஜிர வீதியின் ஊடாக டூப்ளிகேன் வீதியில் பயணித்த கார் ஒன்று திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து விசாகா வித்தியாலயப் பக்கத்தை நோக்கி சென்றுள்ளது.

வீதியின் இருபுறமும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் பலவற்றுடன் மோதி முடிவில் அது புரண்டது.

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் பிள்ளைகளை ஏற்றிச் செல்வதற்காக வந்த பெற்றோரின் வாகனங்களே வீதியின் இருபுறங்களிலும் நிறுத்தப்பட்டிருந்தன.

சுமார் 20 வாகனங்கள் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

விபத்தின் பின்னர் சாரதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும், சம்பவம் தொடர்பில் சாரதியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.







கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நம்ப நடவுங்கள்!

இலங்கையின் அரசியல்வாதிகள் திருந்தப் போவதில்லை. பொய்யிலும், புரட்டிலும் அரசியல் செய்து நாட்டை இந்த வங்குரோத்து நிலைக்குக் கொண்டு வந்து விட்டபின்னரும் கூட அவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளபவர்களாத் தெரியவில்லை. அதிகாரத்தில் – பதவியில் – நீடிக்க வேண்டும் என்பதற்காக எதுவும் கூறுவார்கள் என்பதுதான் நிலைமை.

அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தனா தெரிவிக்கும் கருத்துகள் அப்படித்தான் இருக்கின்றன.

நாட்டையும், மக்களையும் மாத்திரமல்ல, சர்வதேசத்தையும் முட்டாள்கள் என்று நினைத்துக் கொண்டு பேசுகின்றார் போலும் அவர்.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலையில் பெருவாரியாக சர்வதேச உதவி கிட்டினால் மட்டுமே இலங்கை ஒரு நாடாக மீண்டெழ முடியும். நாட்டை இந்தக் குட்டிச் சுவர் நிலைக்குக் கொண்டு வந்து விட்ட அரசியல்வாதிகள், இந்த இழிநிலையிலிருந்து மீளுவதற்கும் விடாமல், தங்கள் கைவரிசையைக் காட்டுகின்றார்கள். அதில் அமைச்சர் பந்துல குணவர்த்தனவும் விதிவிலக்கல்லர்.

இன்றைய இக்கட்டு நிலையில் இருந்து நாம் மேலேறி வருவதற்கு சர்வதேசத்தின் உதவி அவசியம் என்றால், அந்த உதவிகளைப் பெறக் கூடிய காத்திரமான நிலையில் நாம் எம்மை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும். அதற்கு நாம் செய்ய வேண்டிய சில விடயங்கள் உள்ளன.

★ நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை வெளிப்படுத்த வேண்டும்.

★ நம்பகத் தன்மையுடைய ஓர் அரச நிர்வாகத்தை வைத்திருக்க வேண்டும்.

★ அதிகாரத்தில் இருக்கும் ஆட்சிப் பீடத்துடன் சேர்ந்து நாட்டை மீளக் கட்டியெழுப்பும் உத்வேகத்தில் மக்கள் உள்ளனர் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும்.

அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்த்தனவோ பொய்யிலும், புனைகதையிலும் இவற்றைக் காட்டினால் போதும் என்று எண்ணிப் பேசுகின்றார் போலும்.

ஏற்கனவே ஆட்சி அமைந்திருந்த கூட்டில் இருந்து பல கட்சிகள், குழுக்கள் கழன்று விட்டன. எஞ்சிய மொட்டுக் கட்சியினருடன் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்புரிமையைக் கொண்ட ஐ.தே.கட்சியுடன் சேர்ந்து ஓர் அரசை அமைத்து விட்டு, அதற்கு 'சர்வ கட்சி அரசு' என்ற சாயம் பூச முயல்கின்றார் அவர்.

விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில்ல, வாசுதேவ நாயணக்கார போன்றவர்களின் பத்துக் கட்சிகளையும், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் உள்ளடக்கி முன்னர் இருந்த அரசையாவது சர்வகட்சி அரசு' என்றால் ஓரளவுக்கு நம்பலாம். இப்போது இருக்கும் அரைவேக்காட்டு அரசை 'சர்வகட்சி அரசு' என்று கூறி யாரின் காதில் அவர் பூச்சுற்ற முயலுகின்றார்?

இந்த அரசின் மூலம் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அவர் கூறுகின்றமையை 'அத்தைக்கு மீசை முளைத்த' கதையாகவே சர்வதேசம் பார்க்கும்.

அமைச்சர்கள் நியமிக்கப்பட்டாலும், அவர்களுக்குக் கீழ் வரும் நிறுவனங்கள் எவை, எவை என்பது கூட இன்னும் வர்த்தமானியில் அறிவிக்கப்பட வில்லை.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் சில அளப்புகளை – பசப்பு வார்த்தைகளை – மட்டும் நம்பி, இலங்கைக்கு உதவும் நாடுகள் வாரி வழங்கிவிடப்போவதில்லை. நம்பகத்தன்மையை ஏற்படுத்தக் கூடிய காத்திரமான நடவடிக்கைகளை அரசு செயலில் காட்ட வேண்டும். அது நடப்பதாகவும் தெரியவில்லை.

## பொருளாதார, அரசியல் நெருக்கடி காரணமாக துறைமுக சேவை பாதிக்கப்படவே இல்லையாம்!

### துறைமுக அதிகார சபை தெரிவிப்பு

பொருளாதாரம் மற்றும் அரசியல் நெருக்கடி காரணமாக இலங்கையின் துறைமுக சேவை கட்டமைப்பு பாதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தி அடிப்படையற்றதாகும்.

துறைமுக அதிகார சபை, பிரதான தனியார் முனையங்களுடன் ஒன்றிணைந்து செயற்படுகிறது என இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவர் பிரசாந்த ஜயமான்ன தெரிவித்தார்.

துறைமுக அதிகார சபையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

கொழும்பு துறைமுகம் தொடர்பில் சர்வதேச ஊடகங்களில் தவறான செய்திகள் வெளியாகின்றமையை அவதானிக்க முடிகிறது.

தேசிய மட்டத்திலான சமூக வலைத்தளங்களிலும் அந்தத் தவறான செய்திகள் எவ்விதமான திருத்தங்களுமின்றிய வகையில் பிரசுரமாகியிருக்கின்றமையையும் அவ தானித்துள்ளோம்.

நாட்டில் கடந்த ஏப்ரல் மாதத்திற்கு பின்னரான காலப்பகுதிகளில் ஏற்பட்ட அரசியல் நெருக்கடி மற்றும் பொருளாதார பாதிப்பு இலங்கையின் துறைமுக சேவை கட்டமைப்பிற்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்தியை தேசிய மட்டத்தில் திருத்திக்கொள்வது அவசியமாகவுள்ளது.

பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி துறைமுக சேவை கட்டமைப்பிற்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

கொவிட் தாக்கத்தின் போது சுகாதார அறிவுறுத்தல்களைச் செயற்படுத்துவதில் காணப்பட்ட தடைகள் சேவைத் துறைக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு மற்றும் தெற்கு முனையங்களின் நிர்வாகக் கட்டமைப்பும், துறைமுக அதிகார சபையும் ஒன்றிணைந்து கொழும்பு துறைமுகத்தின் சேவை கட்டமைப்பு முன்னெடுக்கப்படுகிறது.

மீள் ஏற்றுமதி நடவடிக்கைகள்,தேசிய கொள்கலன் விநியோகம் மற்றும் தேசிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி நடவடிக்கைகள் முனையங்களின் கூட்டிணைவுடன் முன்னெடுக்கப்படுகின்றன.

சர்வதேச நிறுவனங்களுடனான நிதி கொடுக்கல் டொலர் நாணய அலகில் முன்னெடுக்கப்படுவதுடன், தேசிய மட்டத்திலான கொடுக்கல் வாங்கல் ரூபா அலகில் முன்னெடுக்கப்படுகிறது. துறைமுக அதிகார சபை எவ்வித நிதி நெருக்கடியையும் இதுவரை எதிர்கொள்ளவில்லை. – என்றார்.

## 3,500 இற்கும் அதிகமான பேக்கரிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளனவாம்!

### இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தகவல்



நாடளாவிய ரீதியில் காணப்படும் 7 ஆயிரம் பேக்கரிகளில் 3 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான பேக்கரிகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன தெரிவித்தார்.

சமையல் எரிவாயு, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் கோதுமை மா ஆகியவற்றுக்கு சந்தையில் நிலவும் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றம் காரணமாக எதிர்காலத்தில் 90 வீதமான பேக்கரிகள் மூடப்படும் அபாய நிலையில் உள்ளன எனவும் ஜயவர்தன மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறுகையில் –

'எமக்கு மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாடு காணப்படுகிறது. சமையல் எரிவாயு பற்றாக்குறை, டீசல், பெற்றோல் உள்ளிட்ட தேவைகளும் எமக்கு உள்ளன.

ஆகவே, இந்த விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் சாகல காரியவசமிடம் பேச்சொன்றில் ஈடுபட்டிருந்தோம்.

இந்த சந்திப்பின்போது எமது தேவைகள் மற்றும் பிரச்சினைகளை சுட்டிக்காட்டியிருந்தோம். இதன் பலனாக சம்பந்தப்பட்ட அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு எமது பிரச்சினைகளைத் தெரியப்படுத்தி அவர்கள் ஊடாக எமக்கான தேவைகளைப் பெற்றுத் தருவேன் எனக் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும், மூலப்பொருள்களுக்கான தட்டுப்பாடு தொடருமானால் எதிர்காலத்தில் பேக்கரி பொருள்களை கொள்வனவு செய்வதற்கு பொது மக்கள் நீண்ட வரிசையில் காத்து நிற்கும் நிலை ஏற்படக்கூடும். – என்றார்.

## இருதய சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்படும் அபாயத்தில்!

ஜூன் மாதம் முதல் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சைகள் நிறுத்தப்படும் அபாயம் காணப்படுவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இருதயநோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார் என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இருதய சத்திரசிகிச்சைகளுக்கான மருந்துகள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களின் பற்றாக்குறையே இதற்குக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

சராசரியாக, வைத்தியசாலைகளுக்கு நாளாந்தம் நான்கு பைபாஸ் இதய அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்ற போதிலும் இவை தற்போது குறைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், அனைத்து இதய நோயாளிகளுக்கும் தேவையான எனோக்ஸாபரின் தடுப்பூசிக்கு வைத்தியசாலையில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

இதன் விளைவாக, இதய நோயாளிகள் அதிகஆபத்தில்உள்ளனர்என இருதயநோய் நிபுணர் வைத்தியர் கோட்டாபய ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தற்போது இதய அறுவைச் சிகிச்சைக்கான பல அவசர மருந்துகள் இல்லை எனவும் கூறப்படுகின்றது.

இந்த மருந்துகள் அடுத்த மூன்று மாதங்களுக்குள் கிடைக்காவிட்டால் ஏனைய இதய அறுவை சிகிச்சைகளும் தடைப்படும் அபாயம் உள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# சாணக்கியன் கூறியமையைப்போன்று மக்கள் வங்கியில் கடன் பெறவில்லை

## தயா கமகே ஆணித்தரம்



மக்கள் வங்கியில் இருந்து கடன் பெற்றுக்கொண்டு மூன்று வருடமாக ஒரு சதமேனும் செலுத்தவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ள குற்றச்சாட்டை நிராகரிக்கிறேன் என பதாக ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான தயா கமகே தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள அவரது காரியாலயத்தில் நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் –

மக்கள் வங்கியில் இருந்து நான் அதிக பணம் கடன் பெற்றேன் எனவும் கடந்த வருடங்களாக ஒரு சதமேனும் செலுத்தவில்லை எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் குற்றம் சாட்டியிருந்தார்.

அவர் இந்தக் குற்றச்சாட்டை நாடாளுமன்றத்திலும் தெரிவித்திருந்தமையுடன் பின்னர் ஊடக சந்திப்பொன்றின் போதும் தெரிவித்திருந்தார். நாடாளுமன்றத்தில் தெரிவித்த விடயத்துக்கு என்னால் நடவடிக்கை எடுக்க முடியாது. என்றாலும் ஊடக சந்திப்பில் தெரிவித்த கருத்துக்கு எதிராக எனனால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

அத்துடன் இன்றுகூட எனது தொழிற்சாலைகள் இயங்குகின்றன. கொரோனா காலத்திலும் சிரமங்களுக்கு மத்தியில் சிறப்பாக ஆடைதொழிற்சாலைகள் இயங்கின. இங்கு தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் எனது நிறுவனத்தில் அதிகமாக வேலை செய்கின்றனர்.

சாணக்கியன் தெரிவித்திருக்கின்றமைபோல் ஒரு சதமேனும் மக்கள் வங்கியில் இருந்து நான் கடன் பெற்றதில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

நாங்கள் வியாபாரம் செய்கின்றவர்கள். ஆனால் இவ்வாறான கடனுக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எனது கௌரவத்தைப் பாதிக்கும் வகையில் என்மீது பொய்க் குற்றச்சாட்டை சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் சாணக்கியனுக்கு தனிப்பட்ட பிரச்சினைகள் இருக்கலாம். அதற்காக என்னை இவ்வாறு அவர் கூற முடியாதல்லவா. இதற்காக உரிய நடவடிக்கை அவருக்கு எதிராக எடுக்கப்படும் என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன்.

அதற்காக என்னை திருடர் எனத் தெரிவித்து ரணில் விக்கிரமசிங்கவுடன் இருப்பவர்கள் அனைவரும் திருடர்கள் எனத் தெரிவிப்பதற்கு அவர் முயற்சிக்கின்றார். எனவே இந்த அபாண்டமான குற்றச்சாட்டை அவர் மீளப்பெற்றுக்கொள்ள வேண்டும். – என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த கடல் அட்டைகளுடன் ஒருவர் கைது





தமிழகத்தின் இராமநாதபுரம் மாவட்டம் பட்டிணம் காத்தான் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்த இருந்த ஒரு கோடி ரூபா மதிப்பிலான பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளுடன் செவ்வாய்க்கிழமை காலை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதோடு ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டம் பட்டிணம் காத்தான் பகுதியில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக பதப்படுத்தப்பட்ட சுமார் 200 கிலோ மதிப்புள்ள கடல் அட்டைகளை, வாகனத்தில் ஏற்றிக்கொண்டு இருந்தனர்.

இதன் போது பட்டணம் காத்தான் புறவழிச் சாலை பகுதியில் கேணிக்கரை பொலிஸார் இருவரை சந்தேகத்தின் பேரில் விசாரணை செய்தமையில், ஒருவர் தப்பிச் சென்ற நிலையில், மற்றொருவர் முன்னுக்குப்பின் முரணான தகவல்களை தெரிவித்தமையால், விசாரணை செய்ததில் இலங்கைக்கு படகு மூலம் பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் கடத்தப்பட இருந்தமை தெரிய வந்துள்ளது.

இதனைத் தொடர்ந்து இராமநாதபுரம் பகுதியைச் சேர்ந்த பழனி என்பவரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தியதில், அவரிடம் இருந்த சுமார் 200 கிலோ மதிப்புள்ள ஒரு கோடி ரூபா மதிப்பிலான பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டு, மேலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் போதைப்பொருளுடன் மூவர் கைது

நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

திருகோணமலை – கிண்ணியா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பில் ஒரு கிராம் 650 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 22 வயதுடைய கிண்ணியா பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். கிண்ணியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

பேலியகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினால் 65 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 32 வயதுடைய மருதானை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். பேலியகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

உப்புவெளி – அந்தன்குளம் பிரதேசத்தில் ஒரு கிராம் 600 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் 45 வயதுடைய உப்புவெளி பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். உப்புவெளி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வைத்தியரின் மேற்பார்வையில் பரீட்சைக்கு தோற்றிய மாணவி!



டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த பாடசாலை மாணவியொருவர் வைத்திய மேற்பார்வையில் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றியுள்ளார்.

குறித்த மாணவி டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

பின்னர், பதுளை பொது வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி பாலித ராஜபக்ஷவின் வேண்டுகோளுக்கு இணங்க வைத்தியசாலையின் பணிப்பாளர் உபுல் கருணாரத்னவால், சிறுமி பரீட்சை நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்.

இந்நிலையில், பரீட்சை நிலையத்திற்குச் சென்ற மாணவி 7 மணித்தியாலங்களின் பின்னர் மீண்டும் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 2 வயதில் அம்பாறை சிறுமி உலக சாதனை

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை அல் – மினன் வீதி ஸர்ஜூன் அக்மல் பாத்திமா நுஸ்ஹா தம்பதிகளின் புதல்வியான மின்ஹத் லமி தனது இரண்டரை வயதில் 120 உலக நாடுகளின் தலைநகரங்களை இரண்டு நிமிடத்தில் மிக வேகமாகக் கூறி உலக சாதனைப் புத்தகத்தில் தனது பெயரைப் பதிவு செய்தமை பலரது பாராட்டுகளையும் பெற்றுள்ளது.

உலக சாதனை புத்தக நிறுவனம் இந்தச் சிறுமியின் திறமையையும், அதீத நினைவாற்றலையும் பரிசீலனை செய்து உலக சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்து சாதனைச் சிறுமியாக தமது இணையத் தளத்தில் வெளியிட்டுள்ளது. இவருக்கான இலச்சினை, பதக்கம் மற்றும் சான்றிதழ் என்பவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தனது இரண்டு வயதில் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த மின்ஹத் லமி மருதமுனை வரலாற்றில் உலக சாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்த முதலாவது சாதனை சிறுமியாவார். இந்த வரலாற்று சாதனையை நிகழ்த்திய சிறுமியை பிரதேச மக்கள் பலரும் பாராட்டி வருகின்றார்கள்.

இவர் 2019 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 10 ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தை மருதமுனை மும்ஸ் மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) பழைய மாணவராவார். இவரது தாய் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் இறுதி வருடத்தில் கல்வி கற்று வருகின்றார்.

இவரது தந்தை தனது குழந்தையின் திறமையையும், அதீத நினைவாற்றலை பற்றித் தெரிவிக்கும் போது, 'பிறந்த குழந்தைகளின் கைகளில் விளையாட்டுப் பொருள்களுக்குப் பதிலாக ஸ்மார்ட் போன்களை திணித்து மகிழும் பெற்றோருக்கு மத்தியில் நான் எனது குழந்தைக்கு நிறங்கள், பழங்கள், இலக்கங்கள், வடிவங்கள், எழுத்துக்கள் மற்றும் பொது அறிவுத் தகவல்களையும், அது தொடர்பான எளிய செயல்முறைகளையும் கற்றுக் கொடுத்தமையுடன் குழந்தையுடன் அதிக நேரத்தை செலவிட்டு இன்று எனது குழந்தையை ஒரு சாதனை குழந்தையாக மாற்றியுள்ளேன்' என்றார்.

இந்தச் சிறுமி தனது பெற்றோர் சொல்லிக் கொடுப்பதை கவனமாகச் செவிமடுத்து மனனம் செய்வதுடன், ஞாபகத்திலும் வைத்துக் கொள்வார். இவர் ஏதாவது ஒரு பொருளையோ, ஓர் இடத்தையோ அவதானித்தவுடன் அது பற்றி அறிந்துகொள்ள அதிக ஆர்வம் காட்டக் கூடியவர். அதனை அறிந்து கொண்டு சில நாள்களுக்கு பின்னர் அப்பொருள் பற்றியோ அவ்விடம் பற்றியோ தானாகவே சொல்லக் கூடிய திறமை அவரிடம் உண்டு.

இவர் 300 இற்கு மேற்பட்ட தமிழ்ச் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை தெளிவாக சொல்லக் கூடிய திறமையுள்ளவர். தமிழ் அகரவரிசையிலுள்ள 247 எழுத்துகளையும் மிக வேகமாக சொல்லக் கூடியவர். அத்துடன் மாதங்கள், வாரங்கள், நிறங்கள், பழங்கள், வடிவங்கள், உடல் உறுப்புகளின் பகுதிகள், பறவைகள், இலக்கங்கள், ஆங்கில எழுத்துகள் மற்றும் அதற்கான சொற்களையும் ஒழுங்குவரிசையாகவும், வரிசை இல்லாமலும் மிக வேகமாக சொல்லக் கூடிய திறமை இவரிடம் உண்டு. இவை தவிர பொதுஅறிவு உள்ளிட்ட விடயங்கள், 100 இஸ்லாமிய கேள்விகளுக்கான பதில்களை சொல்லக் கூடியவர். தற்போது அல்குர்ஆனின் பல சூறாக்களையும் மனனம் செய்து வருகிறார்.

இந்தச் சிறுமி எதிர்காலத்தில் கல்வித் துறையிலும், ஏனைய துறைகளிலும் மென்மேலும் பல சாதனைகளைப் பெற்று எதிர்காலத்தில் நாட்டுக்குப் பெருமையை தேடித் தரக் கூடிய ஒருவராக மிளிர வேண்டும் என்று பலரும் வாழ்த்துகின்றனர்.

# தமிழ் தேசிய பசுமை இயக்க இராசதானியம் சிறுதானிய உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம்









தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் இராசதானியம் என்ற பெயரில் சிறுதானியங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கும் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

சிறுதானியங்களை மீள முடிசூட்டுவோம் என்ற மகுட வாசகத்துடன் முன்னெடுக்கப்பட்டுள்ள இராசதானியத் திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை அச்சுவேலி பத்தைமேனியில் நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் வளவாளர்களாக ஓய்வுநிலை பிரதி விவசாயப் பணிப்பாளர் பொ.அற்புதச்சந்திரன், சமூக செயற்பாட்டாளர் ம. செல்வின் இரேனியஸ் ஆகியோர் கலந்துகொண்டார்கள். சிறுதானியங்கள் தமிழ் மக்களின் பண்டைய உணவுப்பண்பாட்டில் முதன்மை இடத்தைப்பெற்றிருந்தன. தற்போது இவை வழக்கொழிந்து வரும் நிலையில் நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியையும், காலநிலை மாற்றங்களையும் கருத்திற்கொண்டு மீளவும் இவற்றின் பயன்பாட்டை அதிகரிக்கச் செய்யும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் அச்சுவேலிப் பகுதியிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 100 விவசாயிகளுக்கு குரக்கன், வரகு, பயறுஆகியவற்றின் விதைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

விவசாயிகள் பெற்றுக்கொண்ட விதைகளின் இரண்டு மடங்கு விதைகளை அறுவடையின் பின்னர் ஏனைய விவசாயிகளுக்கு வழங்கும் நோக்கில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்திடம் கட்டணம் எதுவுமின்றி வழங்க வேண்டும் என்ற வேண்டுகோளுடனேயே விதைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

சிறுதானிய உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கான வசதிகளைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் விவசாயிகளுக்குச் செய்துகொடுக்கும் எனவும், இந்தத் திட்டத்தில் இணைந்து பயன்பெற விரும்பும் விவசாயிகள் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்துடன் தொடர்புகொண்டு சிறுதானிய விதைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இந்த நிகழ்ச்சியின்போது அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுவர், பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிராக முல்லைத்தீவில் கவனவீர்ப்பு போராட்டம்!

சிறுவர் மற்றும் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கு எதிராக முல்லைத்தீவில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு கிழக்கு பெண்கள் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலக முன்றிலில் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதன்போது சிறுமி பாத்திமா ஆயிஷாவின் மரணம் தொடர்பாக நியாயமான விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஒன்றுதிரண்ட சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் உள்ளிட்டவர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

நீதிவேண்டும் நீதிவேண்டும். சிறுவர்களை வாழவிடு போன்ற கோஷங்களை எழுப்பியவாறு கவனவீர்ப்பை வெளிப்படுத்தினார்.

சிறுவர்களுக்கும் பெண்களுக்கும் நீதிகோரிய இந்த கவனவீர்ப்பு போராட்டம், அண்மையில் 9 வயது சிறுமியின் கொலை சம்பவம் முழு நாட்டையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது சிறுமிகளையும், பெண்களையும் காப்பாற்றுவது அரசினதும் சமூகத்தினரும் கடமையாகும், இலங்கையில் சட்ட ஆட்சி முறை நடைமுறைப் படுத்தப்படவில்லை, குற்றவாளிகளைத் தப்பிக்க வைக்கும் நடைமுறை இலங்கையில் காணப்படுகின்றது. சட்டத்தரணிகள் நியாயத்தின் பக்கம் இணையவேண்டும், 9 வயது சிறுமியின் கொலையின் உண்மைத்தன்மை வெளிக்கொண்டு வரவேண்டும். நிலுவையில் உள்ள வழக்குகள் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கவேண்டும். பெண்கள், சிறுவர்களுக்கான விசேட நீதிமன்ற விசாரணை முறைமைகள் இலங்கையில் நடைமுறைக்கு வரவேண்டும் என்றும் போராட்டத்தின் இறுதியில் வாசிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டது.

ஆர்ப்பாட்ட பேரணியின் போது கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்–

நாட்டில் போதைப்பொருள் பாவனையின் அளவு நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கின்றது. போதைப்பொருள் வியாபாரிகளுக்கு வழங்கப்படும் தண்டனை மிகக்குறைவாக இருப்பதும் காரணம், சிறுவர்கள் மத்தியில் அதிகளவில் போதைப்பொருள் விதைக்கப்பட்டுள்ளது.

ஒருபக்கம் பட்டினி வாட்டுகின்றது மறுபக்கம் எதிர்கால சந்ததியினரை வன்முறை வாட்டுகின்றது. இதற்காக சரியான பொறிமுறை உருவாக்கப்படவேண்டும்.

சிறுமிக்கு நடந்த கொடுமை பாராதூரமானது. இலங்கையில் சிறுவர்கள் மீதான வன்முறை அதிகரித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் தொடர்பான குழு தெரிவித்துள்ளது. விடுதலைப்புலிகள் காலத்தில் இவ்வாறன சம்பவம் நடைபெறவில்லை இதனை இன்று நாடாளுமன்றத்தில் பேசுகின்றார்கள்.

இந்த ஆயிஷாவுக்கு நடந்த படுகொலை இலங்கையில் நடந்த முதல் தடவையான சிறுவர் துஷ்பிரயோகம் அல்ல. வித்தியா தொடக்கம் இன்றுவரை சிறு பிள்ளைகள் கொலை செய்யப்படும் வரலாறு இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதற்கு பிரதான காரணமாக போதைப்பொருள் பாவனை ஆகும்.

இந்த போதைப்பொருளை ஒழிப்பதற்கு இன்னும் சட்டத்தில் இடம் இல்லை என்றுதான் நாங்கள் கருதுகின்றோம். அனைத்துக்கும் ஆணைக் குழு அமைக்கப்படுகின்றது. ஆனால் சிறுவர் துஷ்பிரயோகத்திற்கோ அல்லது போதைப்பொருள் ஒழிப்பதற்கோ ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்படவில்லை. இதற்கான தனியான ஆணைக் கழுவை நிறுவி தனியான சட்டத்தை நாடாளுமன்றத்தில் இயற்றி சிறுவர்கள் வாழ்வதற்கு விடுதலையை பெற்றுக்கொடுக்க அரசிடம் வேண்டுகின்றோம் என்றும் தெரிவித்துள்ளனர்.

# சாதாரண தர பரீட்சை எழுதிய 74 வயதுடைய முதியவர்!



நெலுவ களுபோவிட்டியனை வசிப்பிடமாகக் கொண்ட 74 வயதான சந்திரதாச கொடகே எனும் முதியவர், நெலுவ தேசிய பாடசாலையில் க.பொ.த. சாதாரணதர பரீட்சையின் விஞ்ஞானம் மற்றும் கணிதம் ஆகிய பாட பரீட்சைகளுக்கு விண்ணப்பித்திருந்தார்.

இதன்படி, கடந்த சனிக்கிழமையன்று விஞ்ஞான பாட பரீட்சைக்கு தோற்றியிருந்த சந்திரதாச கொடகே, திங்கட்கிழமை கணிதபாட பரீட்சைக்கும் தோற்றியிருந்தார்.

கடந்த வருட க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் விஞ்ஞான பாடத் துக்குத் தோற்றி அந்த பாடத்தில் சாதாரண (எஸ்.) சித்தி பெற்றிருந்தார்.

இந்த விடயம் தொடர்பாக சந்திரதாச கூறுகையில் –

எனக்கு இப்போது 74 வயதாகிறது. 1970 ஆம் ஆண்டு தான் நான் முதன் முதலாக க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றினேன். அலபலதெனிய மகா வித்தியாலயத்தில் படித்தேன். அந்தப்பரீட்சையில் நான்கு திறமை சித்திகள் பெற்றிருந்தேன்.

ஆனால், அப்போதைய அரசியல் அழுத்தத்தால் பரீட்சையில் தேர்ச்சி பெற்றாலும் எனக்கு வேலை கிடைக்கவில்லை.

ஆத்ம திருப்திக்காக பரீட்சை எழுதுகிறேன். புத்தகங்கள் படிப்பதன் மூலம் அறிவு கிடைக்கிறது. இப்போது பாடத்திட்டம் மாறிவிட்டது. நவீனமயமாக்கப்பட்ட கல்வி முறை உள்ளது.

அன்றைய தினம் போல் அல்லாமல், தற்போது பாடசாலை மாணவர்கள் கல்வி கற்க ஏராளமான வசதிகள் உள்ளன. அப்போது எங்களுக்கு எந்த வசதியும் இல்லை. இப்போது பயிற்சி வகுப்புகள் உள்ளன. ஊடகங்கள் மூலம் கற்பித்தல் நடைபெறுகிறது. செய்தித்தாள்களிலிருந்து கற்றுக்கொள்ளலாம்.

கடந்த ஆண்டை விட இந்த முறை விஞ்ஞான பாட பரீட்சை கடினமாக உள்ளது. பரீட்சைக்கு அமர்வதோடு மாத்திரம் கற்றலை மட்டுப்படுத்த முடியாது. சாகும் வரை கற்க வேண்டும். கற்றுக் கொள்ள வேண்டிய விடயங்கள் உள்ளன. – என்றார்.

# இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளை நாடாளுமன்றில் சமர்ப்பிக்க அமைச்சரவை அனுமதி

சட்டபூர்வமற்ற வெளிநாட்டு நாணய வணிக நடவடிக்கைகள் அதிகரிப்பதைத் தடுப்பதற்காகவும் மற்றும் சரக்குகள் சுங்க விடுவிப்பின் போதான இறக்குமதிக்கான குறைந்த செலவுச்சிட்டையை சமர்ப்பிக்கப்படுவதைத் தடுக்கும் நோக்கிலும், இலங்கை மத்திய வங்கியின் மூலம் தெரிவு செய்யப்பட்ட ஒருசில கொடுப்பனவு முறைகளுக்கு மட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

திறந்த கணக்கு கொடுப்பனவு முறை, சரக்கு விற்பனையின் பின்னர் பணம் கொடுப்பனவு முறை, கொடுப்பனவின் பின் ஆவணச் செலுத்தல் முறை, ஏற்றுக்கொள்ளலின் அடிப்படையில் ஆவணச் செலுத்தல் முறை ஆகியவற்றை மட்டுப்படுத்தக் கூடிய வகையில் 1969 ஆம் ஆண்டின் முதலாம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ‘2022 ஆண்டின் 07 ஆம் இலக்க கொடுப்பனவு முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்’ மேற்கொள்ளப்பட்டு மே மாதம் 06 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள அத்தகைய ஒழுங்குவிதிகள் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்தில் அமைச்சரவை அங்கீகாரத்துடன் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

அதற்கமைய, 2022 ஆண்டின் 07 ஆம் இலக்க செலுத்தல் முறைகளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகளை நாடாளுமன்ற அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

# உரம் கிடைக்கும் வரையும் பார்க்காது விவசாயிகள் பயிர்ச் செய்கையில் ஈடுபடுக!

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர கோரிக்கை

உலக உணவு நெருக்கடியை எதிர்கொள்வதற்காக விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பில் அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

எனவே உரம் கிடைக்கும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல், உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பயிர்ச்செய்கையில் ஈடுபடுமாறு விவசாயிகளிடம் கேட்டுக் கொள்கிறேன் என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

இரசாயன மற்றும் சேதன உரங்களைப் பெற்றுக் கொள்வதற்காக 7 பிரதான நாடுகளிடம் எழுத்து மூலம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியாவுடன் இதன் போது நேரடி பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும் விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

வாராந்த அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு இடம்பெற்ற போது இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இவ்வாரம் இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் உணவு உற்பத்தி மற்றும் விவசாயத்தை ஊக்குவிப்பது தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டது.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியை எதிர்கொள்வதை இலக்காகக் கொண்டு இந்த விடயம் தொடர்பில் பரந்தளவில் ஆராயப்பட்டது.

அதற்கமைய உள்நாட்டில் விவசாயத்தை மேம்படுத்துவதற்காக இரசாயன மற்றும் சேதன உரத்தினைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் 7 பிரதான நாடுகளுடன் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த 7 நாடுகளினதும் இலங்கைக்கான தூதுவர்களிடம் தொடர்ந்தும் பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக இந்தியாவிடமிருந்து 65 ஆயிரம் மெற்றிக் தொன் இரசாயன உரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான பேச்சுகள் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகருடனும், இந்தியாவிலுள்ள இலங்கை உயர்ஸ்தானிகர் மிலிந்த மொரகொடவுடனும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருடன் பிரத்தியேக பேச்சுகளை முன்னெடுக்கவுள்ளேன்.

அத்தோடு விதை நெற் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவோருக்கு நிவாரண அடிப்படையில் உரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரிசி தட்டுப்பாட்டை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வருடத்தில் இதுவரையில் 3 லட்சத்து 38 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. உலகில் அரிசியின் விலை அதிகரிப்பதற்கு முன்னர் மேலும் தேவையானளவு அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருகிறது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்படும் அரிசியை நிவாரண விலையில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதே போன்று உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் அரிசியை அரசாங்கம் நேரடியாக அதிக விலைக்கு



பெற்று மக்களுக்கு நிவாரண விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அடுத்த வருடத்திலேனும் அரிசி இறக்குமதியை முற்றாகத் தவிர்ப்பதை இலக்காகக் கொண்டு நெற் பயிர்ச்செய்கையை விவசாயிகள் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும்.

எனவே உரம் கிடைக்கப் பெறும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல், உரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பயிர் செய்கையில் ஈடுபடுமாறு விவசாயிகளிடம் கேட்டுக் கொள்கின்றோம். பயிர்ச்செய்கையின் போது விவசாயிகள் நஷ்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். – என்றார்.

# 2, 500 கோடி ரூபாவினால் அரச செலவுகள் குறைப்பு?

அரச செலவுகள் 2ஆயிரத்து 500 கோடி ரூபாவால் குறைக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசின் இந்த ஆண்டுக்கான செலவுகளை 2ஆயிரத்து 500 கோடி ரூபாவால் குறைப்பது தொடர்பான வழிமுறைகளை திறைசேரி பரிந்துரை செய்துள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

ஏற்கனவே இந்த ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத் திட்டத்துக்குப் பதிலீடாக இடைக்கால வரவு – செலவுத் திட்டமொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதில் குறிப்பாக அரச மூலதன செலவுகள் வெகுவாகக் குறைக்கப்பட உள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 4 கோடி ரூபா பெறுமதியான தங்கத்துடன் மூவர் கைது!



தலைமன்னார் பகுதியில் இலங்கை சுங்கத்தின் காங்கேசன்துறை பிரிவினரால் 4 கோடி ரூபா பெறுமதியான தங்கத்துடன் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என சுங்கப் பேச்சாளர் பிரதிப் பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.

தலைமன்னார் பகுதியில் சுமார் 4 கோடி ரூபா பெறுமதியான இரண்டு கிலோ தங்கத்துடன் சந்தேக நபர்கள் மூவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

வடமத்திய கடற்படை தலைமையகத்துக்குக் கிடைத்த தகவலின் பிரகாரம் தலைமன்னார் கடற்பரப்பில் சந்தேக நபர்கள் மூவருடன் தங்கம் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபர்கள் புதுக்குடியிருப்பு மற்றும் பேசாலை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என சுங்கப் பேச்சாளர் தெரிவித்தார்.

சம்பவம் தொடர்பில் இலங்கை சுங்கத்தின் காங்கேசன்துறை பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# ஆயிஷா கொலை சந்தேகநபருக்கு ஆதரவாக சட்டத்தரணி ஆஜராகாவிட்டால் அது அவருடைய தனிப்பட்ட விருப்பம்!

## சட்டத்தரணிகள் சங்கம் அறிக்கை

எந்தவொரு சந்தேகநபருக்கும் தாம் சட்டத்தரணி ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும், நிரபராதி என்று நிரூபிக்கப்படுவதற்குமான உரிமை இருக்கின்றது.

இருப்பினும் அட்டுலுகம சிறுமி படுகொலை விவகாரத்துடன் தொடர்புடைய சந்தேகநபருக்கு ஆதரவாகத் தாம் ஆஜராகப்போவதில்லை என்று எந்தவொரு சட்டத்தரணியேனும் கூறியிருந்தால், அது அவர்களுடைய தனிப்பட்ட தெரிவு மாத்திரமேயாகும் என்று இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் தெரிவித்திருக்கிறார்.

பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டுலுகம பிரதேசத்தைச் சேர்ந்த 9 வயதான சிறுமி பாத்திமா ஆயிஷா அக்ரம் படுகொலை தொடர்பில் பிரதான சந்தேகநபரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இருப்பினும் அந்தச் சிறுமியின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்கு ஆதரவாக ஆஜராகாமல் இருப்பதற்கு சட்டத்தரணிகள் தீர்மானித்திருக்கின்றனர் என்பதாக வெளியாகியிருந்த செய்தியொன்றை மேற்கோள்காட்டி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும் நீலன் திருச்செல்வம் அறக்கட்டளையின் தலைவருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் அவரது உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றைச் செய்திருந்தார்.

'குற்றமிழைக்காத நிரபராதி என்ற கருதுகோளுக்கு வரல், தன்னைப் பிரதிநிதித்துப்படுத்துகின்ற சட்ட அதிகாரியொருவரைக் கொண்டிருப்பதற்கான உரிமை உள்ளடங்கலாக நியாயமான வழக்கு விசாரணைக்கு உட்படுவதற்கான உரிமை என்பன குற்றவியல் சட்டக் கட்டமைப்பின் அடிப்படைகளாகும்.

அதனைப் புறக்கணிப்பதென்பது மிகப்பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும்' – என்று அவர் அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அம்பிகா சற்குணநாதனின் அப்பதிவிற்குப் பதிலளிக்கும் வகையில் செய்திருக்கும் மீள்பதிவிலேயே சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவரது முழுமையான பதிவு வருமாறு:

'நான் அம்பிகா சற்குணநாதனின் கருத்துடன் முழுமையாக உடன்படுகின்றேன். எந்தவொரு சந்தேகநபருக்கும் தாம் சட்டத்தரணி ஒருவரால் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கும், நிரபராதி என்று நிரூபிக்கப்படுவதற்குமான உரிமை இருக்கின்றது.

இந்த உரிமை எந்தவொரு வழிமுறைகளிலும் பின்தள்ளப்படக்கூடாது. ஆனால் அட்டுலுகம சிறுமி படுகொலை விவகாரத்துடன் தொடர்புடைய சந்தேகநபருக்கு ஆதரவாகத் தாம் ஆஜராகப்போவதில்லை என்று எந்தவொரு சட்டத்தரணியேனும் கூறியிருந்தால், அது அவர்களுடைய தனிப்பட்ட தெரிவு மாத்திரமேயாகும்' என்று தெரிவித்துள்ளார்.

# தெற்கில் போராட்டம்; வடக்கில் விசாரிப்பு இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் விசனம்

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு போன்ற அத்தியாவசிய நெருக்கடிகள் என்பவற்றைக் கண்டித்து அரசிற்கு எதிராக இளையோர் போராடிவரும் நிலையில் அத்தகைய போராட்டம் வடக்கிலும் நடக்குமா? நடக்கிறதா? என்ற தோரணையில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பிரதிநிதிகளிடம் விசாரணை நடைபெறுகின்றது.

இது ஒருவகை அச்சுறுத்தல் என்றே தோன்றுகின்றது. காலம் காலமாக உரிமைக்காக உயிருக்காக உறவுகளுக்காகப் போராடி நொந்துபோய் ஏதோ நடப்பது நடக்கட்டும் என்ற பெருமூச்சோடு 'அரசன் அன்றறுப்பான் தெய்வம் நின்றறுக்கும்' என்ற நம்பிக்கையோடு, தெற்கில் இன்று மக்கள் கொதித்தெழுந்ததை ஏளனம் செய்யாமல் இன்னும் எமக்குத்தான் துன்பங்கள் இழப்புகள் வந்துவிடுமோ என்ற அச்சத்தில் அமைதியாக இருக்கும் வடக்கு கிழக்கு மக்களுக்குத் தொடர்ந்தும் அச்சத்தை ஊட்ட நினைப்பது வேடிக்கையானது. வேதனைக்கு உரியது.

இதனை விசனமாக வெளியிடுவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. ஏனெனில் அது எமது தலைவிதி. கல்வியில் கடைநிலை. பொருளாதாரத்தில் கடைநிலை. உற்பத்தியில் கடைநிலை. தொழில் வழங்கலில் கடைநிலை. இவற்றை சீர் செய்ய எவராலும் முடியாது. யாருமே உதவிக்கும் வரமாட்டார்கள்.

தெற்கின் போராட்டம் பற்றித் தமிழ் அரசியல்வாதிகள் வெவ்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். அந்தப் போராட்டத்தின் பிரதம செயற்பாட்டாளர் கைது செய்யப்பட்ட சம்பவத்தையும் படித்தோம்.

ஆகையால் ஜனநாயக வழிமுறைப் போராட்டங்களை நசுக்குவதை விட்டுவிட்டு அப்போராட்டங்களுக்கான தீர்வை வழங்க முயற்சி செய்யுங்கள். உண்பதற்கே வழியில்லாமல் இருக்கும் எங்களைத் தொடர்ந்தும் அச்சுறுத்தாதீர்கள்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரசியல், பொருளாதார மறுசீரமைப்புக்களை செய்யாமல் டொலர் கிடைக்கும் எனக் கனவு காண்பது பயனற்றது!

## லக்ஷ்மன் கிரியெல்ல அட்வைஸ்



சர்வதேச நாணய நிதியம் உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்களிடமிருந்து நீண்ட கால உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கு அரசியல் மற்றும் பொருளாதார மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவை இரண்டையும் மேற்கொள்ளாமல் நாட்டுக்கு டொலர் கிடைக்கும் என்று கனவு காண்பது பயனற்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் –

நாடு இன்று எதிர்நோக்கும் பொருளாதாரப் பேரழிவு தொடர்பில் ஒன்றரை வருடங்களுக்கு முன்பே எதிர்வு கூறினோம்.

எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கும், எதிர்க்கட்சியில் உள்ள பொருளாதார நிபுணர்களுக்கும் எச்சரிக்கை விடுத்தனர்.

ஆனால் அரசாங்கம் அவற்றை சிறிதும் கண்டு கொள்ளவில்லை. ரூபாவின் பெறுமதி பூச்சியமாகக் குறையும் வரை என்று காத்திருந்தனர்.

இவற்றுக்கு மத்தியிலும் நிதி அமைச்சர் நாடாளுமன்ற அமர்வுகளில் கூட கலந்து கொள்ளவில்லை. இவ்வாறான நிலையில் நாட்டுக்கு டொலர் கிடைக்கப் பெறும் என்று அரசாங்கம் கனவு காண்கிறது.

உலக வங்கி 70 கோடி அமெரிக்க டொலர்களை வழங்குவதாக வெளிநாட்டலுவல்கள் அமைச்சு கூறியது.

ஆனால் அவ்வாறு கூறி 24 மணித்தியாலங்களுக்குள் இலங்கைக்கு அவ்வாறான உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை என உலக வங்கி அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

இன்று இந்நாட்டின் நிலைமை என்ன? நெருக்கடியின் கடைசி 3 அல்லது 4 மாதங்களில் நினைவில் கொள்ள வேண்டிய இரண்டு விடயங்கள் உள்ளன.

இப்போது ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளை பார்த்தால், நம் நாட்டின் தலைவர்கள் பல்வேறு நாடுகளிலும், பல்வேறு நிறுவனங்களிலும் உதவி கேட்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ளலாம்.

இன்று வரை சிறிதளவான உதவிகளே கிடைத்துள்ளன. ஆனால் நாட்டைக் கட்டியெழுப்பத் தேவையான உதவிகள் இன்னும் கிடைக்கவில்லை.

காரணம் என்ன? உலக வங்கி அறிக்கை, ஐ.நா. அறிக்கை, சர்வதேச நாணய நிதிய அறிக்கையை அவதானிக்க வேண்டும்.

காரணம் இலங்கைக்கு உதவுவதற்கு அவற்றால் இரு விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் முதலாவது பொருளாதாரச் சீர்திருத்தங்களாகும். வருமானத்தை விட செலவுகள் மூன்று மடங்கு அதிகமாகும்.

இந்த நிலைமையை நிவர்த்தி செய்ய வேண்டும். இரண்டாவதாக அரசியல் சீர்திருத்தங்கள் முன்வைக்கப்பட வேண்டும்.

இவை இரண்டையும் முன்னெடுக்கவில்லை எனில் எந்தவொரு கடனுதவியும் கிடைக்கப் பெறாது.

அதற்குத் தேவையான பொருளாதார மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் சர்வதேசத்துக்கு வழங்கப்பட வேண்டும்.

குறித்த சீர்திருத்தங்கள் மக்களால் கோரப்பட்டவையாக இருக்க வேண்டும்.

நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு சர்வதேச நாணய நிதியம் மட்டுமே உதவி செய்கிறது. எனவே மேற்குறிப்பிட்ட இரண்டு விடயங்கள் தொடர்பிலும் திட்டமொன்றை சமர்ப்பித்து , அந்தத் திட்டத்தை அவர்கள் ஏற்றுக்கொண்ட பின்னரே நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான உதவிகள் கிடைக்கப்பெறும். இந்த விடயங்கள் ஊடகங்களில் வெளிவருவதில்லை.

இந்த முன்மொழிவுகள் பற்றி நாங்கள் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளோம். எனினும் அதற்கான நடவடிக்கைகள் இதுவரையிலும் முன்னெடுக்கப்படவில்லை.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் அரசியல் சீர்திருத்தங்கள் தொடர்பில் அரசாங்கம் எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் அறிக்கையொன்றை வெளியிடும் என நம்புகின்றோம்.

வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களின் நம்பிக்கையைக் கூட பெறமுடியாத அரசாங்கத்தால் எவ்வாறு சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையைப் பெற முடியும்? தற்போது அமைக்கப்பட்டுள்ள அரசாங்கம் ஒரு புதிய அரசாங்கம் என கூறினாலும் அது நகைப்பிற்குரியதாகவே உள்ளது.

காரணம் ஏற்கனவே பதவி விலகியவர்களே மீண்டும் அமைச்சராகளாகியுள்ளனர்.

இது சர்வ கட்சி அரசாங்கம் அல்ல. எதிர்க்கட்சிகளின் அனுமதியின்றியே சில எம்.பிக்கள் அரசாங்கத்தில் இணைந்து கொள்கின்றனர்.

ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தும் இருவர் அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கியுள்ளனர். பொருளாதாரத்தை அழித்த அரசால் அதை மீளக் கட்டியெழுப்ப முடியுமா? இதை புரிந்து கொள்ள வேண்டும்.

நாட்டில் பொதுத் தேர்தல் மட்டுமே தற்போதைய நிலைமைக்கு ஒரே தீர்வாகும். ஒரு அரசாங்கம் பொதுத் தேர்தலின் மூலம் அதிகாரத்துக்கு வரும் போது, அந்த அரசாங்கம் சட்டபூர்வமான தன்மையைப் பெறுகிறது.

நாட்டை அழித்தவர்களால் இப்போது வெளிநாடுகளின் உதவித் திட்டங்களுக்குச் செல்ல முடியாது – என்றார்.

# ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை தவிர்த்து பிறிதொரு அமைச்சு எதையும் வகிக்ககூடாது

## பைஸர் முஸ்தபா வலியுறுத்து

அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்டத்தில் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை தவிர்த்து பிறிதொரு அமைச்சுக்களை வகிக்க கூடாது என்ற வரையறை உள்வாங்கப்பட வேண்டும். பொருத்தமற்ற தரப்பினர் அமைச்சின் செயலாளர்களாக நியமிக்கப்பட்டமையால் முழு அரசசெயலொழுங்கும் சீரழிந்துள்ளது.

இனி வரும் காலங்களில் அமைச்சின் செயலாளர்கள் பொதுநிர்வாக சேவையில் இருந்து துறைசார் அடிப்படையில் நியமித்தல் கட்டாயமாக்கப்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உபதலைவர் ,முன்னாள் அமைச்சர் பைஸர் முஸ்தபா தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசமைப்பின் 21ஆவது திருத்தச்சட்ட மூலவரைவு தொடர்பில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி நீதியமைச்சரிடம் பல திருத்த யோசனைகளை முன்வைத்துள்ளது.நாணய சபையின் உறுப்பினர்கள் மற்றும் அமைச்சரவையின் செயலாளர்கள் ஆகியோர் அரசமைப்பு சபை ஊடாக நியமிக்கப்பட வேண்டும்.

அத்துடன் அரசமைப்பு சபை முறையான விடயதானங்களுக்கு அமைய செயற்படும் வகையில் திருத்தங்கள் கொண்டு வருதல் அவசியமாகும். முப்படைகளின் தளபதி என்ற அடிப்படையில் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை வகித்தல் அவசியமாகும்.



பாதுகாப்பு அமைச்சைத் தவிர்த்து ஜனாதிபதி ஏனைய அமைச்சுகளை வகிக்கக் கூடாது என்ற வரையறை 21ஆவது திருத்தத்தில் உள்வாங்கப்பட வேண்டும்.

அரசமைப்பால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரம் தொடர்பில் சர்ச்சைக்குரிய விடயங்கள் தற்போது காணப்படுகின்றன. ஆகவே, பொது மன்னிப்பு தொடர்பி;ல் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்க விசேட ஆலோசனை சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

பொது நிர்வாக சேவைக்கு அப்பாற்பட்ட வகையில் அமைச்சின் செயலாளர்கள் நியமிக்கப்பட்டமையால் முழு அரச செயலொழுங்கும் சீரழிந்துள்ளது.

இனிவரும் காலங்களில் அமைச்சின் செயலாளர்கள் பொது நிர்வாக சேவைத்துறையில் இருந்து துறைசார் அடிப்படையில் நியமிக்கப்படுதல் கட்டாயமாக்கப்பட வேண்டும். – என்றார்.

# அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்ட மருந்துகள் 12 நாள்கள் விமானநிலையத்தில் தேக்கம்!

அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்ட மருந்துகளை உடனடியாக விடுவிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இது தொடர்பான பணிப்புரை விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் உள்ள இலங்கையர்களால் மேற்படி மருந்துகள் மற்றும் உபகரணங்கள் நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை நாட்டை வந்தடைந்து 12 நாள்கள் கடந்துள்ள போதும், அவற்றை கட்டுநாயக்கவில் இருந்து விடுவிப்பதற்கு இதுவரை எவ்வித நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை.

இந்நிலையிலே, மேற்படி மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை உடனடியாக விடுவிக்குமாறு சுகாதார அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

அமெரிக்காவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு 03 நாள்களுக்குள் அனுப்பட்ட மருந்துவ பொருள்கள் 32 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கொழும்புக்கு எடுத்துச் செல்ல 12 நாள்கள் ஆகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 21 ஆவது திருத்தச் சட்ட வரைவை விரைவாக உடன் நிறைவேற்றுங்கள்!

## போக்குவரத்து சங்கத்தின் பிரதிநிதிகள் வலியுறுத்தல்

உத்தேச அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்ட மூலவரைவினை விரைவாக நிறைவேற்றுமாறு போக்குவரத்து சங்கத்தின் பிரதிநிதிகள் நீதி, சிறைச்சாலை விவகாரம் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷவிடம் வலியுறுத்தினார்.

விசேடமாக பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் வகையில் அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

ஓரிரு வாரங்களுக்குள் திருத்தத்தை நிறைவேற்றுவது அவசியமாகும் என தொழிற்சங்க பிரதிநிதிகள் அமைச்சரிடம் எடுத்துரைத்தனர்.

பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியில் அரசியலமைப்பின் 21ஆவது திருத்தச்சட்ட மூலத்தை கொண்டு வருவதன் அவசியத்தை அமைச்சர் தொழிற்சங்க பிரதிநிதிகளிடம் தெளிவுபடுத்தினார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தினால் நீக்கப்பட்ட தேசிய பெறுகை ஆணைக்குழு மற்றும் கணக்காய்வு ஆணைக்குழுவை மீள ஸ்தாபித்தல், ஆணைக்குழுக்களுக்கு சுயாதீன அதிகாரங்களை வழங்கல் 21 ஆவது திருத்தத்தின் பிரதான அம்சங்களாகும்.

21 ஆவது திருத்த வரைவு தொடர்பில் சகல தரப்பினருக்கும் தெளிவுப்படுத்துவது அவசியமானதாகும் என அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, அகில இலங்கை பாடசாலை மாணவர்கள் போக்குவரத்து சேவை சங்கம், அகில இலங்கை ஓட்டோ சேவை சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் இதன்போது கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir

# எட்டாண்டுகள்; மோடி மொடல்!

**இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அரசமைத்து எட்டு ஆண்டுகள் பூர்த்தியாகியமையை ஒட்டி 'எட்டாண்டு மோடி மொடல்' என்ற தலைப்பில் நேற்று முன்தினம் இந்தியாவின் 'தினமணி' நாளிதழ் வரைந்த ஆசிரியர் தலையங்கம் இது .**



எட்டு ஆண்டுகளை நிறைவு செய்து ஒன்பதாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கிறது நரேந்திர மோடி அரசு. 2014 ஆம் ஆண்டு மே மாதம் 26 ஆம் திகதியும், இரண்டாவது முறையாக 2019 ஆம் ஆண்டு மே 30 ஆம் திகதியும் நரேந்திர மோடி பிரதமராக பதவி ஏற்றுக் கொண்டார்.



கடந்த எட்டு ஆண்டுகளில், தேசிய அளவிலும் சாவதேச அளவிலும் உலகம் மிகக் கடினமான சூழலை எதிர்கொண்ட போதும், மிகச் சாதுரியமாக இந்தியாவை வழிநடத்தி அவா வெற்றியடைந்திருக் கிறாா என்பதில் எள்ளளவும் யாருக்கும் சந்தேகம் இருக்க வழியில்லை.

நரேந்திர மோடி அரசு 2014 -இல் ஆட்சிக்கு வந்தபோது தேசிய அளவில் மக்கள் மனதில் தன்னம்பிக்கை குன்றி யிருந்தது என்பதையும், கடந்த எட்டு ஆண்டுகளில் இந்தியா ஒரு வல்லரசு நாடாகத் தன்னை வடிவமைத்துக் கொண்டு வருகிறது என்பதையும் மறுப் பதற்கில்லை.

உலக வரலாறு கண்டிராத கொள்ளை நோய்த்தொற்றை, மிகுந்த துணிச்சலுட னும், தன்னம்பிக்கையுடனும் நம்மால் எதிர்கொள்ள முடிந்தது என்கிற ஒரு கார ணத்துக்காகவே பிரதமா நரேந்திர மோடி யையும் அவரது அரசையும் நாம் பாராட் டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சா்வதேச அரங்கில் இந்தியா இதுவரை இல்லாத அளவிலான முக்கியத்துவம் பெற்றிருப்பதற்குப் பிரதமா நரேந்திர மோடியின் அணுகுமுறைதான் காரணம். அமெரிக்காவின் தலைமையிலான 'க்வாடிலும்' உறுப்பினராக இருந்து கொண்டு, ரஷியாவுடனும் நட்புறவு பேண முடியும் என்கிற 'அணிசேரா' ராஜதந்திரத் துக்காகவே பிரதமா நரேந்திர மோடியை எத்துணை பாராட்டினாலும் தகும்.

நரேந்திர மோடி அரசின் மிகப் பெரிய வெற்றி, அவரது தலைமையிலான அமைச்சரவை அங்கத்தினாகள் மீது கடந்த எட்டு ஆண்டுகளில் எந்தவித ஊழல் குற்றச்சாட்டையும் இதுவரை சுமத்த முடியவில்லை என்பதுதான். ரஃபேல் போா விமானம் வாங்கியது தொடாபாக எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுகள் இன்று வரை நிரூபிக்கப்படவில்லை.

இதற்கு முன்பு பிரதமாகளாக இருந்த வாகளின் ஆட்சிகள் மீது எழுப்பப்பட்டமை போன்ற ஊழல் குற்றச்சாட்டுகள் எதுவும் இவரது அரசின் மீதோ, அமைச்சாகள் மீதோ இல்லாமல் இருந்திருப்பது, பிர தமா் நரேந்திர மோடியின் தலைமைப் பண்புக்கும், ஆளுமைத் திறனுக்குமான அடையாளமல்லாமல் வேறென்ன?

கடந்த எட்டாண்டு சாதனைகள் குறித் துப் பட்டியலிடவும் பெருமிதப்படவும் பிர தமா் நரேந்திர மோடிக்கு நிறையவே இருக்கின்றன. 'அனைவருடனும் அனை வருக்குமான ஆட்சி' என்பதுடன், அவா குறிப்பிடுவதுபோல, 'அனைவரின் நம் பிக்கையுடனும், அனைவரின் உழைப் புடனும்' முன்னெடுக்கப்படும் வளாச்சி இலக்குகள் இந்திய மக்களின் வாழ்க் கைத் தரத்தில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றன.



கடந்த எட்டாண்டுகளில் வறுமைக் கோட்டுக்குக் கீழே இருப்பவாகளின் அளவு 22 வீதத்திலிருந்து 10 வீதமாகக் குறைந்திருக்கிறது; கடுமையான வறு மையில் இருப்பவாகளின் அளவு ஒரு வீதத்துக்கும் கீழே குறைந்திருக்கிறது; தனிநபா வருவாய் இரட்டிப்பாகி இருக்கி றது; அந்நியச் செலாவணி இருப்பும் இரு மடங்காக உயாந்திருக்கிறது; புதிதாக 6,53,000 அரசுப் பள்ளிகள் கட்டப்பட்டி ருக்கின்றன.

15 எய்ம்ஸ் மருத்துவமனைகள் அறி விக்கப்பட்டு அவற்றில் 10 மருத்துவம னைகள் செயல்படத் தொடங்கி விட்டன. ஐந்து எய்ம்ஸ் மருத்துவமனைகள் இறு திக்கட்ட நிலையில் இருக்கின்றன. இது வரை இல்லாத வகையில் மருத்து-வாகளின் எண்ணிக்கை 12 லட்சமாக அதிகரித்திருக்கிறது.

உலகிலேயே சாலைக் கட்டமைப்பில் இரண்டாவது இடத்திற்கு இந்தியா உயாந் திருக்கிறது; 2012 - 13-இல் இந்தியாவின் உணவு தானிய உற்பத்தி 25.5 கோடி டன் என்றால், இப்போது (2021 - 22) அதுவே 31.6 கோடி டன். இது ஒரு வர லாற்று சாதனை என்றால், ஏற்றுமதியி லும் 418 பில்லியன் டாலரை (சுமாா ரூ. 32.4 லட்சம் கோடி) எட்டி இந்திய சாதனை புரிந்திருக்கிறது.

கொள்ளை நோய்த்தொற்றை எதிர் கொள்ள இந்தியாவிலேயே தடுப்பூசிகள் தயாரித்ததும், கடந்த இரண்டாண்டுகளாக 80 கோடி இந்தியாகளுக்கு இலவச தானியங்கள் வழங்கியதும் நினைத்துப் பார்க்க முடியாத மிகப் பெரிய சாதனை கள். நமக்காக மட்டுமல்லாமல் நமது அண்டை நாடுகளுக்கும், பல வளாச்சி யில் பின்தங்கிய நாடுகளுக்கும் நாம் தடுப்பூசிகள் வழங்கியபோது, வல்லரசு நாடுகளே நம்மை வியப்புடன் பார்த்தன. நமது மனிதாபிமானத்துக்கு உலகமே தலைவணங்கியது.

சாமானியாகளுக்கு இலவச மருத் துவக் காப்பீட்டுத் திட்டமும் (ஆயுஷ்மான் பாரத்), விவசாயிகள், கூலித் தொழிலா ளா்களுக்கு மாத ஓய்வூதியமும், விவசா-யிகளின் இடுபொருள் தேவைக்கான 'கிஸான் சம்மான்' உதவியும், இதற்கு முன்பு எந்தவொரு ஆட்சியும் கற்பனை கூடச் செய்யாத மக்கள் நலத்திட்டங்கள்.

அனைவருக்கும் வங்கிக் கணக்கு (ஜன்தன் யோஜனா) மூலம் மானியங்கள் இடைத்தரகாகளால் சுரண்டப்படாமல் பயனாளிகளை நேரில் சென்றடைய வழி கோலிய புத்திசாலித்தனமும், பத்து கோடிக்கும் அதிகமான வீடுகளில் கழிப் பறைகள் கட்டிக் கொடுக்கப்பட்ட முன் னெடுப்பும், ஒன்பது கோடிக்கும் அதிக மான எளிய குடும்பங்களுக்கு சமையல் எரிவாயு இணைப்புத் திட்டத்தின் மூலம் நிகழ்த்திய புரட்சியும் எட்டாண்டு வரலாற்று சாதனைகள்.



"நரேந்திர மோடி அரசு மதவாத அரசு என்று குற்றம்சாட்டுபவாகள், மேலே குறிப்பிட்ட எந்தவொரு திட்டத்திலாவது, சமுதாயத்தின் எந்தவொரு பிரிவினராவது விடுபட்டிருக்கிறார்களா? அனைவருக் குமான வளாச்சியில் பாகுபாடு காட்டப் பட்டிருக்கிா? என்கிற கேள்விக்கு பதில் அளித்துவிட்டு மதவாத அரசு என்று குற் றம் சுமத்தட்டும்" – என்கிற பா.ஜ.கவின் தேசியத் தலைவா ஜே.பி. நட்டாவின் கருத்தை யாரால் மறுத்துவிட முடியும்?

காஷ்மீருக்குத் தனி அந்தஸ்து அகற்றப்பட்டது, அயோத்தியில் ராமா கோயில் கட்டப்படுவது, முத்தலாக் முறை யைத் தடை செய்தது, குடியுரிமை திருத் தச் சட்டம் ஆகியவை 'இந்துத்துவ' கொள் கைகள் அல்லவா என்று கேள்வி எழுப் பலாம். நீதிமன்றத் தீா்ப்பின் அடிப்படை யிலும், நாடாளுமன்ற அங்கீகாரத்தின் பின்னணியிலும்தான் அவை முன் னெடுக்கப்பட்டன என்பதை நாம் மறந்து விடக் கூடாது.

மக்கள் மன்றத்தின் அங்கீகாரம் பெற்று ஆட்சி அமைத்ததால் 'திராவிடமா டல்' ஆட்சி அமைவதுபோல, பா.ஜ.க. தனது தோ்தல் வாக்குறுதிகளில் குறிப் பிட்ட திட்டங்களை செயல்படுத்தும்போது அதை விமா்சிக்க முற்படுவது என்ன நியாயம்? எந்தவொரு அரசியல் கட்சியும் தனது கொள்கைகளை நடைமுறைப்ப டுத்தவே, மக்கள் மன்றத்தின் அங்கீகா ரத்தைப் பெற்று ஆட்சி அமைக்கிறது. அரசியல் சாசன வரம்புகள் மீறப்படாமல் அவற்றை நடைமுறைப்படுத்தினால் தவறுகாண முடியாது.

உத்தர பிரதேசத்தில் 60 வீதக்கும் அதிகமான முஸ்லிம் சிறுபான்மையினா உள்ள தொகுதி ஒன்றில் பா.ஜ.க. வேட் பாளா் வெற்றி பெறுகிறாா எனும்போது, இது 'அனைவருடனும் அனைவருக்கு மான வளாச்சி'யை வழங்கும் ஆட்சி என்பது உறுதியாகிறது. இதே நிலைமை தொடருமானால், ஜவாஹாலால் நேரு வுக்குப் பிறகு தொடாந்து மூன்று முறை பிரதமராகப் பதவி வகித்த பெருமைக் குரியவராக நரேந்திர மோடி வரலாற்றில் இடம்பெறக்கூடும்.

# உலக புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு!





மட்டக்களப்பு, ஜூன் 02

உலகப் புகைப்பொருள் எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் விழிப்புணர்வு நடவடிக்கையொன்று மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய அபாயகர கட்டுப்பாட்டுசபை மற்றும் மாவட்ட செயலக போதைப்பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவும் இணைந்து மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் மாவட்ட அரசாங்க அதிபருமான கே.கருணாகரனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக நேற்று மட்டக்களப்பு நகர் பகுதிகளில் போதைப்பொருள் தடுப்பு தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது 'சிகரட் குடி செத்துடும் கிளி', 'நாளாந்தம் மரணிக்கும் சுமார் 60 பேருக்குப் பதிலாக 80 பேரையாவது புதிதாகப் பழக்குவதே சிகரட் கம்பனியின் முயற்சியாகும்', 'அவதானமாக இருங்கள் அவர்களின் அடுத்த இலக்கு உமது குழந்தைகளே' மற்றும் 'இக்கால பெண்கள் விரும்புவது சிகரட் புகைத்து, முகம் அவலட்சணமான, வாயில் துர்நாற்றம் வீசுபவர்களை அல்ல, எங்களைப் போல் சிமார்ட் ஆண்களையே' போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட ஸ்டிக்கர்களை இதன்போது பொதுமக்களுக்கு தென்படும் வண்ணமாக வாகனங்களிலும், பொது இடங்கள் மற்றும் கடைகளிலும் காட்சிப்படுத்தியதுடன், 'வாழ்க்கை இன்பமானது – மகிழ்ச்சியை தக்க வைத்துக்கொள்ளுங்கள்' எனும் தலைப்பிலான துண்டுப்பிரசுரங்கள் இதன்போது பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஆண்டுதோறும் மே 31 திகதி சர்வதேச புகைத்தல் தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்ற நிலையில் உலகம் எங்கிலும் தங்களது ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உரிமை கோருவதற்கும் எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்பதற்பதுமே இதன் பிரதான நோக்கமாக கருதப்பட்டே இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

உலக சுகாதார ஸ்தாபனத்தில் அங்கம் வசிக்கும் அனைத்து நாடுகளும் 1987 ஆம் ஆண்டு தொடக்கம் இத்தினத்தை அனுஷ்டித்து வருகின்றன.

உலக சுகாதார ஸ்தாபனம் 2022 ஆண்டுக்கான சர்வதேச புகைத்தல் தடுப்பு தினத்துக்கான உலகலாவிய கருப்பொருளாக 'புகைப்பொருள் நமது சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தலானது' என பிரகடனம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மட்டக்களப்பு மாவட்ட செயலக போதைப்பொருள் தடுப்பு பிரிவின் மாவட்ட இணைப்பாளர் பீ.டினேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நடவடிக்கையை மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் ஏ.நவேஸ்வரன் பங்குபற்றி ஆரம்பித்து வைத்ததுடன், இந்நிகழ்வில் மண்முனை வடக்கு மற்றும் காத்தான்குடி ஆகிய பிரதேச செயலகங்களின் போதைப்பொருள் தடுப்பு பிரிவின் உத்தியோகத்தர்களும், மாவட்ட செயலக உத்தியோகத்தர்களும், இராணுவத்தினரும் இதன்போது கலந்துகொண்டனர்.

# பொதுத் தேர்தல் ஒன்றின் ஊடாகவே பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு!

## அநுர திட்டவட்ட அறிவிப்பு



பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதன் ஊடாகவே, நாட்டின் அரசியல் - பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணமுடியும் என்று ஜே.வி.பி.யின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கடவத்தையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொழும்பு துறைமுக நகரங்கள் 45 ஐ செய்யும் அளவுக்கு நாட்டில் கடன்சுமை ஏற்பட்டுள்ளது. எடுத்தகடனுக்கான வட்டியையும் நாம் செலுத்த வேண்டும்.

இதற்காக மேலும் கடனைப்பெற வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. இவையனைத்துக்கும் டொலர் அவசியமாகும்.

அரசாங்கம் இன்று அனைத்து செயற்பாடுகளையும் நிறுத்தியுள்ளது.

இந்தப் பிரச்சினை பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்தி, ரணிலைக் கொண்டுவந்தால் மட்டும். தீர்ந்து விடப் போகின்றதா?

இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க பொதுத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும்.

ரணிலுக்கு நாடாளுமன்றிலும் சரி, வெளியிலும் சரி பலம் கிடையாது. அவர் ஒரு தனி நபராவார்.

ஆனால், ராஜபக்ஷக்களைப் பாதுகாக்க அவர் சிறந்தவர். ரணில் விக்கிரமசிங்கவால் தான் ராஜபக்ஷக்கள் காப்பாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அவரை பிரதமராக நியமிக்க பொருளாதார காரண மும், அரசியல் காரணமும் உள்ளது. இவ்வாறான அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# யாழ். நூலகம் எரிக்கப்பட்ட 41 ஆண்டு நினைவேந்தல்!



யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டமையின் 41 ஆண்டு நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ் மாநகர சபையின் ஏற்பாட்டில் நேற்று (புதன்கிழமை) காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தில் இந்த நினைவேந்தல் இடம்பெற்றது.

நினைவேந்தலின்போது யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாக விளங்கிய செல்லப்பா அவர்களுக்கும், யாழ்ப்பாண பொதுசன நூலகத்தை எரியூட்டப்பட்டதை அறிந்து உயிரிழந்த தாவீது அடிகளாருக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தலின்போது யாழ் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன், யாழ் மாநகர பிரதி முதல்வர் து.ஈசன், யாழ் மாநகர ஆணையாளர் ஜெயசீலன், யாழ்ப்பாணப் பொதுசன நூலக பிரதம நூலகர், யாழ் மாநகர சபை உறுப்பினர்கள், வாசகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண பொதுநூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதலாம் திகதி வன்முறைக் குழுவொன்றால் தீயூட்டப்பட்டது. நூலகம் எரிக்கப்பட்ட காலத்தில், அங்கு சுமார் 97 ஆயிரம் அரிய நூல்கள் இருந்ததுடன், தென்கிழக்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமாகவும் இது திகழ்ந்தது.

# மருந்துகள் மற்றும் அத்தியாவசிய சத்திர சிகிச்சை உபகரணங்களை நன்கொடையாக வழங்கும் சீனா!

கொழும்பு, ஜூன் 02

2 கோடியே 80 லட்சம் டொலர் பெறுமதியான மருந்துகள் மற்றும் அத்தியாவசிய சத்திர சிகிச்சை உபகரணங்களை இலங்கைக்கு வழங்க சீன அரசாங்கம் முன்வந்துள்ளது.

இவற்றை இரண்டு தனித்தனி தொகுதியாக நன்கொடையாக வழங்க சீனா தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் ஜனக சந்திரகுப்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஜோர்தான் மற்றும் மலேசியாவில் உள்ள ஓர் அமைப்பு இலங்கைக்கு மருந்துகளை வழங்க முன்வந்துள்ளதாக சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு நாட்டில் பற்றாக்குறையாக உள்ள மருந்துகளை வழங்க சுவிட்ஸர்லாந்தில் உள்ள பௌத்த அறக்கட்டளை அமைப்பும் முன்வந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

2 கோடியே 2 மில்லியன் டொலர் பெறுமதியான அத்தியாவசிய மருந்துகளை பங்களாதேஷ் அரசாங்கம் நேற்று இலங்கைக்கு உத்தியோகப்பூர்வமாக கையளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551A கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.06.2022இல் வெளியிடப்பெற்றது

காலைக்கதிர் Kalaikkathir

# காணாமல் போன 3 வயதுச் சிறுமி 2 கிலோ மீற்றர் தொலைவில் மீட்பு

## மிருசுவிலில் நேற்று மாலை சம்பவம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜூன் 02

யாழ்ப்பாணம் தென்மராட்சி, மிருசுவில் பகுதியில் காணாமல்போன 3 வயதுச் சிறுமி ஒருவர் 2 கிலோ மீற்றர் தொலைவில் தனியாக நின்ற சமயம் மீட்கப்பட்டுள்ளார்.

மிருசுவில் வடக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமியே இவ்வாறு காணாமல் போய் மீண்டுள்ளார்.

கபிலன் பவிதா (3 வயது) என்ற சிறுமியே இவ்வாறு நேற்று மாலை 5.30 மணிக்கு பின்னர் காணாமல் போயுள்ளார்.

இதையடுத்து குடும்பத்தார் மற்றும் அயலவர்கள் இணைந்து குறித்த பிரதேசத்தில் தேடுதல் நடத்தியுள்ளனர்.

வீட்டிற்கு அருகாமையில் உள்ள பற்றைப் பகுதிக்கு செல்லும் வழியில் குழந்தையின் கால்தடம் என கருதப்படும் கால்தட அடையாளம் இனம்காணப்பட்டதனால் அந்தப் பகுதியில் தீவிர தேடுதல் முன்னெடுக்கப்பட்டது.

இந்தவேளை மிருசுவில் வடக்கு பகுதியில் உள்ள வயல் பகுதியூடாக பயணித்தால் வரணியை அண்டிய பகுதிக்குச் செல்லும் பிரதேசத்தில் மாலை 7 மணிக்கு பின்னர் குறித்த சிறுமி தனியாக நின்ற சமயம் மீட்கப்பட்டுள்ளார். சிறுமி காணாமல் போன இடத்திற்கும் மீட்கப்பட்ட இடத்திற்கும் 2 கிலோ மீற்றர் தூரத்திற்கும் அதிக தூரம் இருப்பதாக கூறப்படுகின்றது.

மீட்கப்பட்ட சிறுமி, கிராம சேவகர் முன்னிலையில் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாக்கப்பட்ட பின்பு சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## நிந்தவூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட களியோடை ஆற்றின் ஓரத்தில் கடந்த திங்கட்கிழமை காலை தனது வளர்ப்பு மாட்டுக்குப் புல் வெட்டுவதற்காக சென்றவருக்கே இந்தக் கதி நேர்ந்தது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் 55 வயதுடைய நிந்தவூர் 09 ஆம் பிரிவைச் சேர்ந்த அப்துல் மஜீட் ஹுசைன் என்பவராவார். அவரது சடலம் மறுநாளான செவ்வாய்க்கிழமை காலை முதலை தாக்குதலுக்குள்ளான நிலையில் கடற்படையினரின் உதவியுடன் மீட்கப்பட்டது.

ஏழு பிள்ளைகளின் தந்தையாகிய இவர் ஓர் இசைக் கலைஞனாவார். இவர் மிருதங்கம் வாசிப்பதில் சிறந்து விளங்கியவர். மக்களினால் 'டோல் மாஸ்டர்' என அழைக்கப்பட்டவர். கடந்த வருடம் நிந்தவூர் பிரதேச செயலகத்தினால் சுவதம் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திங்களன்று காலை தனது வளர்ப்பு மாட்டுகளுக்கு இவர் புல் வெட்டிக் கொண்டிருந்த களியோடை ஆற்றின் வடக்குப் புறத்தில் இவரது துவிச்சக்கர வண்டியும் சேர்ட்டும் பாதணியும் காணப்பட்டன. மேலும் வெட்டப்பட்ட புற்களும் தலையில் அணிந்திருந்த தொப்பியும் புல்லை எடுத்துச் செல்வதற்காக கொண்டு செல்லப்பட்ட பையும் அந்த இடத்தில் அநாதரவாகக் கிடந்தன. அடுத்து உறவினர்கள் மக்களினால் தேடுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

பின்னர் கடற்படையினரும் அவரைத் தேடும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட நிலையில் தென்கிழக்கு பல்கலைக் கழகத்திற்கு அருகில் உள்ள தென்னந் தோட்டத்தில் உள்ள நீரோடையில் உள்ள முதலையின் புதைகுழி ஒன்றுக்கு அருகில் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அவர் புல் வெட்டிய இடத்திலிருந்து சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் சடலம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது

இந்தச் சம்பவம் தொடர்பில் நிந்தவூர் மற்றும் அக்கரைப்பற்று பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## வன்முறைச் சம்பவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்காக விசாரணை ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

அந்தக் காலப்பகுதியில் தீவைப்பு, கொள்ளை, கொலை உள்ளிட்ட அனைத்து வகையான சொத்து சேதங்கள் மற்றும் உயிர் சேதங்கள் குறித்து விசாரணை செய்து அறிக்கை தயாரிக்கும் பணியை ஆணைக்குழுவிடம் ஜனாதிபதி ஒப்படைத்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் நீதிமன்ற நீதிபதி, ஜனாதிபதி வழக்கறிஞர் பி.பீ. அலுவிஹாரே தலைமையில் முன்னாள் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் எஸ்.எம். விக்ரமசிங்க மற்றும் மேலதிக பிரதம மதிப்பீட்டாளர் என்.ஏ.எஸ் வசந்த குமார ஆகியோர் இந்த ஆணைக்குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி நேற்றுப் பிற்பகல் கொழும்பு கோட்டை ஜனாதிபதி மாளிகையில் வைத்து கையளித்தார்.

## 20 நாள்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழங்கப்படுகிறது.

ஒரு வருடத்தில் நெற்செய்கைக்குத் தேவையான யூரியாவின் அளவு 65,000 மெற்றிக் தொன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 369 வகையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செல்லுப்படியாகும் உரிமம் இல்லாவிடின், அத்தியாவசியமற்ற 369 பொருள்களை இலங்கைக்குள் இறக்குமதி செய்வதை மட்டுப்படுத்தி கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், அந்த 369 அத்தியாவசியப் பொருள்களையும் செல்லுப்படியாகும் உரிமம் இன்றி இறக்குமதி செய்ய அனுமதி வழங்கி நேற்று முதல் அமுலுக்கு வரும் வகையில் வர்த்தமானி அறிவித்தல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தற்போது நிலவும் வரிகள் உட்பட பொருந்தக்கூடிய விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு உட்பட்டு இவ்வாறு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 8 வீதமாக இருந்த வற் வரி நேற்று முதல் 12 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்த ராஜபக்ஷவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மஹிந்த ராஜபக்ஷவை புதுடில்லியில் பொது நிகழ்வொன்றில் உரையாற்றுவதற்காகவும், இந்து, பௌத்த ஆலயங்களிற்கு விஜயம் மேற்கொள்வதற்காகவும் அழைக்கவுள்ளேன்.

அவர் மழைக்காலத்திற்கு முன்னர் ஜூன் மாதத்தில் இந்தியாவிற்கு வர முடியும் என நான் எதிர்பார்க்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

## நகைக்கடையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கில்லாடிப் பெண்கள் மூவரும் வகையாக மாட்டிக்கொண்டனர்.

கஸ்தூரியார் வீதியில் உள்ள நகைக் கடையில் நேற்று முன்தினம் சென்ற மூன்று பெண்கள் காப்புக் கொள்வனவு செய்வது போன்று பாசாங்கு செய்து, கடை உரிமையாளர்கள் அசந்த நேரம் ஆறு காப்புகள் மற்றும் ஒரு பூட்டுக் காப்பு என 11 பவுண் நகைகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.

இதேநேரம் நேற்றைய தினம் யாழ் நகரில் உள்ள பிரபல நிதி நிறுவனம் ஒன்றில் அடைவு வைக்க களவாடப்பட்ட நகைகளைக் கொண்டு சென்ற சமயம், களவு கொடுத்த கடையின் பணியாளர் ஒருவரும் அதே நிறுவனத்திறகு நிதிசார் விடயமாக சென்றதனால் நகையை அவதானித்து அவர், அவை தமது கடையில் களவாடப்பட்ட நகை என்பதை அறிந்து உடன் நிதி நிறுவனம் மற்றும் கடை உரிமையாளருக்கு தகவல் வழங்கினார். அதையடுத்து நகைகளை ஆட்டையைப் போட்ட கில்லாடிப் பெண்கள் இனம் காணப்பட்டனர்.

இவர்கள் நாவற்குழிப் பிரதேசத்தில் சர்ச்சைக்குரிய குடியேற்றப் பகுதியில் வசிப்பவர்கள் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

## வெள்ள நிவாரணப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் சீரற்ற காலநிலையினால் 6 மாவட்டங்களில் 144 குடும்பங்களைச் சேர்ந்த 576 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு, 236 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, சீரற்ற வானிலை காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக கடற்படையின் 13 நிவாரணக்குழுக்கள் பாதிப்புக்குள்ளான பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என கடற்படை ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விலைகள் உடனடியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்தியாவசியமற்ற பாவனைப் பொருள்கள் என்று அரசு வகைப்படுத்தியுள்ள பெரும்பாலான பொருள்கள் இந்த வரி அதிகரிப்பினால் இரண்டு, மூன்று மடங்கு விலை உயர்வை எட்டும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய அந்நிய செலாவணி நெருக்கடி நிலையில் பொருள்களின் இறக்குமதியை கட்டுப்படுத்த இந்த வரி அதிகரிப்பு என்று அரசுத் தரப்பில் கூறப்பட்டாலும், இவை எல்லாம் சேர்ந்து விலை அதிகரிப்பை மிக மோசமாக ஏற்படுத்தப் போகின்றன என்று அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

ஜோக்கட் வகைகள், சீஸ், இறக்குமதியாகும் தோடம்பழங்கள், அப்பிள், திராட்சை, கோதுமைமாவு, சாக்லேட்டுகள், கொக்கோ பொருள்கள், குடி வகைகள் வெளிநாட்டு சம்போக்கள், காலணி வகைகள், குளிரூட்டிகள், சலவை இயந்திரங்கள், எலக்ட்ரானிக் அவன்கள், இறக்குமதியாகும் வாத்திய கருவிகள் போன்ற பலவற்றின் விலைகள் அதிகரிக்கும் என்று கூறப்படுகின்றது. இதேசமயம் வற் வரி அதிகரிப்பினால் சாதாரண அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் சேவைக் கட்டணங்கள் யாவும் மேலும் உயரும் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இந்த வரிஅதிகரிப்புகள் நேற்று ஜூன் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளன.

## நூலக எரிப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)



நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தின் முகப்பு வாசலில் இடம்பெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட அக்கட்சியின் உறுப்பினர்கள் இதில் கலந்து கொண்டனர்.



